<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 150/2012

Deposition of Witness : DW 2

Name : சுமதி (வயது – 50 )

Father's Name /W/o : க/பெ குமரேசன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : தக்கோலம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.07.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். என் கணவரின் தந்தை பெயர் கோபால். அவர் பி.எஸ்.என்.எல் தொலைபேசி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தாரா என்றால் ஆம். என் கணவரின் தந்தை தாவா சொத்தை வாங்கினாரா என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் குமரேசன் தாவா சொத்து அவர் தந்தை வாங்கினார் என்று ஒப்புகொண்டார் என்றால் எனக்கு தெரியாது. 1 முதல் 7 வாதிகள் என் கணவருடன் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் என்றால் சரிதான்.

2. என் கணவரும் அவர் தம்பியும் பாகப்பிரிவினை செய்வது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். தாவா சொத்து வாதிகளின் தந்தை சொத்து என்பதால் என் கணவருக்கும் அவர் தம்பிக்கும் நடைபெற்ற 2 பாகப்பிரிவினைகள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் என் கணவர் மற்றும் அவர் தம்பி அவர்களுக்கு பிரித்து கொடுத்தார்.

3. வாதிகளுக்கு பிரித்து கொடுத்த சொத்து பத்திரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் என்னென்ன சொத்துக்கள் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் 2007 ஆம் வருடம் எழுதி கொடுத்தார்கள் மற்ற விபரம் எனக்கு தெரியாது. என் கணவர் மற்றும் அவர் தம்பி வாதிகளுக்கு எந்த சொத்தும் தரவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிகள் என் கணவருக்கு மற்றும் அவர் தம்பிக்கும் சொத்து எழுதி கொடுத்ததாக நான் சாட்சியம் அளித்தது பொய் என்றால் சரியல்ல. பொது அதிகாரம் பி.சா.ஆ – 3 யார் எழுதி கொடுத்தது என்றால் எண் கணவர், அவர் தம்பி மற்றும் அவர் தங்கை எழுதி கொடுத்தார்கள்.

4. பி.சா.ஆ – 3 பொது அதிகார பத்திரம் அசல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்த பி.சா.ஆ – 3 சான்றிட்ட நகல் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என் கணவரின் தங்கை பி.சா.ஆ – 3 எழுதி கொடுக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.சா.ஆ – 3 பத்திரத்தில் சாட்சி கையொப்பம் யார் அளித்தார் என்றால் என் ஊரை சேர்ந்த ஐயா முதலியார் மற்றும் பொய்பாக்கம் ஊரை சேர்ந்த சிவகுமார் சாட்சி கையொப்பம் அளித்தார்கள். வேறு யாரும் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

5. பி.சா.ஆ – 3 பத்திரத்தில் சாட்சிகள் கையெழுத்தை என் கணவர் தான் போட்டார் என்றால் சரியல்ல. பி.சா.ஆ – 3 பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. தாவாவில் எத்தனை சொத்துகள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 7 1/4 ஏக்கர். பி.சா.ஆ – 3 சொத்து விபரத்தில் எவ்வளவு விஸ்தீரணம் தெரிவித்துள்ளது என்றால் 3 1/4 ஏக்கர். பி.சா.ஆ – 3 பொய்யான ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் சொத்து விற்றது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் என் கணவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே வாதிகளுக்கும் தாவா சொத்தில் பாகம் உண்டு என்றால் எனக்கு தெரியாது.